



தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, வார்டு 180 திருவான்மியூர்,பாரதிதாசன் காலனியில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப்பள்ளியில், ரூ.27,89,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமயலறைக் கட்டடத்தினையும், வார்டு 128, விருகம்பாக்கம் ஜெயகோபால் கரோடியா மேல்நிலைப்பள்ளியில், ரூ.50, 00,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தினையும், அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். உடன் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., டாக்டர்.கனிமொழி சோமு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் அரவிந்த் ரமேஷ், அசன் மவுலானா, பிரபாகர் ராஜா, பகுதிச் செயலாளர்கள், துரைகபிலன், மு.ராசா, கே.கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் விசாலாட்சி துரைகபிலன், திருமதி.ரத்னா லோகேஷ்வரன், வட்டச் செயலாளர்கள் ராஜாரமணன், கணேஷ்குமார், கோவிந்தராஜன், ராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.

### கே.பி.சுந்தரேசன் தலைமையில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# புழல் 24வது வட்டக் கழகம் சார்பில் அறுசுவை உணவு - நல உதவிகள்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எல்.எல்.ஏ. வழங்குகிறார்! என்.ராஜ்குமார் ஏற்பாட்டில்!

*மாதவரம், ஜூன் 15-*

மாதவரம் பகுதி புழல் 24 ஆவது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா தகவல் தொழில் நுட்ப அணி என்.ராஜ்குமார் ஏற்பாட்டில் புழல் 24வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமையில் இன்று (15 6 2025 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணியளவில் பொது மக்களுக்கு மதிய உணவும், 24 ஆவது வார்டு தூய்மைப் பணிப் பெண்களுக்கு சேலையும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ்.சீனிவாசன் ஏற்பாட்டில் வழங்குகின்றார்.

இந்நிகழ்ச்சியில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், ஆர்.டி.மதன், வட்டக் கழக நிர்வாகிகள் சி.ஜே.ரவி, பி. கென்னடி, என்.எழில்ராவணன், எம். அந்தோணி, மலர்கொடி, செல்வராஜ், ஏ.ஜெயகர், பிஎஸ்என்எல் நாகராஜ், கே.பி.பி.அறிவழகன், எம்.கௌதமன், எம். உதயப்பாரி, ராஜேஷ்குமார், ஏ.வி.ஆர்.அருண், வி.விக்னேஸ்வரன், அகஸ்திய ராஜன், இ.எஸ்.தமிழ் கொடி, வி.சுரேஷ் காந்தி, பி.தனசேகரன், வழக்கறிஞர் கே.பி.எஸ். அன்பரசு, என்.அம்பேத்கர், சேகர், கருணாகரன், சுந்தர மோகன், சாமிநாதன், சி. ஜே.ரமேஷ், இமையன், அருள், ஜெகன், முரளி, எம். பி.முருகேசன், சுரேஷ், கபாலி, லட்சுமணன், ஆர். எம்.கதிரவன், பி.கதிரவன், எம்.செல்வகுமார், எம். அசோக், சக்கரவர்த்தி, அப்பு பாஸ்கர் மெட்ரோ ராஜன், சுரேஷ் காந்தி, புவியரசன், தமிழ்செல்வன், எம்.சி.வேலு, ஏகன், நிர்மல், கழக முத்து, சித்தார்த், ரூசோ, தமிழ் வேந்தன், சுகுமார், குபேரன், நாராயணன், பிரவீன் குமார், பிரதீப் குமார், செல்வகுமார், வி.குலசேகர், கிருஷ்ண மூர்த்தி, எம்.கே.பாலாஜி, ஜெயபிரகாஷ், ஆலய சாமி, ஸ்டீபன், எம்.கே.டி.ராஜன், மார்க்கோனி, சம்பத்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகத்தின் தோழர்கள், முன்னோடிகள், இளைஞரணி மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 24 வது வட்ட தகவல் தொழில் நுட்ப அணி என் ராஜ்குமார் செய்துள்ளார்.

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ.– ரபிக் அஹமது பங்கேற்பு !

# பம்மல் தெற்கு பகுதி கழக பாக முகவர்கள்- ஆய்வுக் கூட்டம்!

### பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி அறிக்கை !

*சென்னை ஜூன்: 15*

பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பம்மல் தெற்கு பகுதியில் பாக முகவர்கள் ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டலின்படி இன்று (15-6-2025 ஞாயிற்றுக் கிழமை) பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் வட்டங்கள் வாரியாக ஒவ்வொரு பாகத்திலும் அந்த பாகத்தில் உள்ள பகுதிகளிலே நேரடியாக கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டங்களில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ,தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ரஃபி அஹமத் வருகை தந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள புதிய உறுப்பினர் சேர்த்தல் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒவ்வொரு பாகத்திலும் கழகத் தோழர்கள் எவ்வாறு பணியாற்றுவது குறித்து சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

எனவே அட்டவணையில் அறிவித்த உள்ளபடி 15-6-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி அளவில் 10வது வார்டு 327வது பாகத்தில் பாக முகவர்

டி.வெங்கடேசன் தலைமையில் வட்ட கழகச்

செயலாளர் எச்.முகமது அப்பாஸ் ஒருங்கிணைப்பாளர் சு.மனோகர்

10.00 மணிக்கு 12வது வார்டு 393 ஆவது பாகத்தில் பாக முகவர் ஆர்.பத்மநாபன் தலைமையில் வட்ட கழக செயலாளர் பி.ஸ்ரீதர் ஒருங்கிணைப்பாளர் வே.க. தன்ராஜ் ஏற்பாட்டில்

11.00 மணிக்கு 8வது வார்டு 350 வது பாகத்தில் பாக முகவர்

என்.பன்னீர்செல்வம் தலைமையில் வட்ட கழகச் செயலாளர் என்.காந்தி ஒருங்கிணைப்பாளர் என்.பன்னீர் செல்வம் ஏற்பாட்டில்

மாலை 4.00 மணிக்கு 10வது வார்டு 323 வது பாகத்தில் பாக முகவர்

பி.லோக பிரபு தலைமையில் வட்டக்கழகச் செயலாளர் H.முகமது அப்பாஸ் ஒருங்கிணைப்பாளர் சு.மனோகர் ஏற்பாட்டில்

மாலை 5.00 மணிக்கு 11 வது வார்டு 329 வது பாகத்தில் பாக முகவர் ஆர்.கணேசன் தலைமையில் வட்ட கழகச் செயலாளர் எம். சாலா (எ) சுகுமாரன் ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன் ஏற்பாட்டில்

மாலை 6:00 மணிக்கு 12வது வார்டு 392 வது பாகத்தில் பாக முகவர் பி.ஸ்ரீதர் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் பி.ஸ்ரீதர் ஒருங்கிணைப்பாளர் வே.க.தன்ராஜ் ஏற்பாட்டில் இந்த அட்டவணைப்படி கூட்டங்கள் நடைபெற உள்ளது.

எனவே வட்டக் கழக செயலாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் இந்தக் கூட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திட வேண்டும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு பாகத்தில் அமைக்கப்பட்ட கழகத்தின் சார்பில் 10 பேர் இளைஞர் அணி 10 பேர் மகளிர் அணி 10 பேர் தகவல் தொழில்நுட்பத்தைச் சேர்ந்த ஒருவர் நூறு வாக்காளுக்கு ஒருவர் என தேர்வு செய்யப்பட்டவர்கள் அந்த பாகத்தில் உள்ள கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் துண்டு பிரசுரம் மூலமாக தகவல் தந்து அவர்கள் அனைவரும் அழைத்து கூட்டங்களில் 100 பேருக்கு குறையாமல் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்து நடத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறன்

இவ்வாறு பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி வேண்டுகோள் விடுத்து அறிக்கை விடுத்துள்ளார்.





சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.நரேந்திரன், பகுதிக் கழகச் செயலாளர் க.ஜெயராமன், 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### திருவெறும்பூர் தொகுதியில்

# கட்டிடங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகள்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டார்!

திருச்சி, ஜூன் 15–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொளி வாயிலாக, திருச்சி திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட வாழவந்தான் கோட்டை ஊராட்சியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.14.31 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட அங்கன்வாடி மையம்,

வாழவந்தான் கோட்டை ஊராட்சி அய்யம்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட நிதி ரூ.12.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட நியாய விலைக்கடை,

பத்தாளப்பேட்டை ஊராட்சியில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.32.80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கான இரண்டு வகுப்பறைகளுடன் கூடிய கூடுதல் கட்டிடம்,

சோழமாதேவி ஊராட்சி பீபிள்ஸ் நகரில் நபார்டு நிதி ரூ.8.04 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி,

நவல்பட்டு முதல்நிலை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதித் திட்ட நிதி ரூ.12.67 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட நியாய விலைக்கடை,

பழங்கனான்குடி ஊராட்சி பூலாங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதித் திட்ட நிதி ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட அங்கன்வாடி, நவல்பட்டு ஊராட்சி அண்ணா நகரில் நபார்டு நிதியில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி,

குண்டூர் ஊராட்சியில் 10 ஆயிரம் லிட்டர் மற்றும் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுடன் இரு வேறு இடங்களில் நபார்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்,

குண்டூர் ஊராட்சி திருவளர்ச்சிப் பட்டியில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுடன் நபார்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கீழமுல்லைக்குடி ஊராட்சி காந்திபுரத்தில் நபார்டு நிதி ரூ.18.42 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு திறக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகிய மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளையும் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.எம்.கருணாநிதி, கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் உடன் இருந்தனர்.





### பா.பொன்னுசாமி தலைமையில் 171 ‘அ’ வட்டக்கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்! எஸ்.முரளி பங்கேற்பு!

*சென்னை, ஜூன் 15-*

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் இலவச தனியார் வேலை வாய்ப்பு முகாம், 171 அ வட்ட செயலாளர் பா.பொன்னு சாமி தலைமையில் இன்று 15.06.2025 - ஞாயிற்றுகிழமை, நேரம்: 9.00 முதல் 2.00 வரை, எண்: 22, முள்ளிக்குப்பம் சீனிவாசபுரம் மீனவர் சமுதாய நலக் கூடம், சீனிவாசபுரம், பட்டினப்பாக்கம், சென்னை-600028-இல் நடைபெறுகிறது.

இதில் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வேலைவாய்ப்பு முகாமை துவக்கி வைக்கிறார்.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, 171வது மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி, கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

அனைவரும் வருக! வருக!! அன்புடன் வரவேற்கிறோம்.


